## எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎப்ஏரீஎம்) சுகாதார முறைமை வலுப்படுத்தல் கூறு - 2014

எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎப்ஏரீஎம்) சுகாதார முறைமை வலுப்படுத்தல் கூறின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே 2011 நவம்பர் 22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்-911-ஜீ15-எஸ் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் சீ(8) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பின்தங்கிய மக்களுக்கு மத்தியில் மலேரியா கட்டுப்பாட்டை தீவிரப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொலர் 15,513,020 ஆகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 யூலை 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 யூலை 15 அளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகள் கொண்டுள்ள தகவல்களுடன் உடன்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 15,865,967 தொகையான முகாமைத்துவக் கட்டணங்கள் தொழில்நுட்ப செலவினங்களின் கீழ் காட்டுவதற்குக் பதிலாக உட்டகட்டமைப்பு மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான செலவினங்களின் கீழ் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக ரூபா 4,471,730 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2014 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 15.51 | 1,766.58 | 2.25 | 293.34 | 5.87 | 759.86 |
| | 15.51 | 1,766.58 | 2.25 | 293.34 | 5.87 | 759.86 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு பொதுத் திறைசேரி ரூபா 317 மில்லியன் தொகை விடுவித்திருந்ததுடன் அதில் செயற்திட்டத்தால் ரூபா 293 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட ஐ.அ.டொலர் 15.51 மில்லியன் மொத்த மானித்தின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 வரை உலகளாவிய நிதியத்தால் ஐ.அ.டொலர் 6.0 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த மானியத்தில் 37.85 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 5.87 மில்லியன் செயற்திட்ட காலம் 62 சதவீதம் கடந்த பின்னர் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்தகையவாறு, மானியத்தின் மிகுதி ஐ.அ.டொலர் 9.64 மில்லியன் செயற்திட்டத்தின் எஞ்சிய 18 மாத காலத்தின் போது பயன்படுத்த முடியுமா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது.

(ஆ) பெறப்பட்ட மானியத்தின் மொத்தப் பெறுகையில், ஐ.அ.டொலர் 166,017 இற்கு சமமான ரூபா 21,756,558 தொகை குறித்த நோக்கத்திற்காக் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டு இறுதியில் பொதுத் திறைசேரிக்கு திருப்பப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 18,517,810 பெறுமதியான 42 சிறிய அளவிலான ஆய்வுகூடங்கள் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஐ இன் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய மாகாண அதிகாரிகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய ஆய்வு கூடங்களிற்கான ஆய்வு கூட

உபகரணங்கள் 2015 மார்ச் 29 வரையும் கொள்வனவு செய்யப்பட்டிருக்காமையால் அவை பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

**3.3. நிதிக் கட்டுப்பாடு**

(அ) செயற்திட்டத்தின் பாதீட்டு மதிப்பீடு செயற்திட்டத்தின் வினைத்திறனான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள வேண்டிய 18 நடவடிக்கைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 106,188,170 கூட்டு மொத்தத் தொகையான மொத்த ஒதுக்கீடுகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத 03 நடவடிக்கைகளின் கீழ் ரூபா 5,314,732 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், பின்னர் அந்த செலவினங்கள் பிரமாணப்படுத்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் செயற்திட்டத்தின் நிதிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு இயலக்கூடியவாறு உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.